நான் அவர்களுக்கு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, அரசாங்க ஊழியர்கள் நடத்தை விதிகளில் என்னென்ன விதிகள் இருக்கின்றனவோ அவைதான் இங்கே பின்பற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே இதற்கு திருத்தங்கள் எதுவும் தேவையில்லை. நீங்கள் என்ன திருத்தங்கள் வேண்டும் என்று கூறியிருக்கிறீர்களோ அவற்றையெல்லாம் பரிசீலனைக்கு கண்டிப்பாக எடுத்துக்கொள்வோம். ஆகவே யாருக்கும் அடிமைகளாக இருக்க வேண்டியதில்லை. அரசுக்கோ, கமிஷனர்களுக்கோ யாருக்கும் அடிமைகளாக இருக்கவேண்டிய அவசியம் கிடையாது. எங்களைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் சுதந்திரம் இருக்கிறது என்ற அடிப்படையில்தான் இந்த விதிகளைக் கூட நாம் அவர்கள் எதிர்பார்க்கிற முறையில், நீதிக்கு ஏற்ற முறையில் செயல்படுத்துவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தங்கள் தேவை இல்லை. அவற்றை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசாமி அவர்கள் நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகியகால விவாதம் சேதுசமுத்திரத் திட்டம் பற்றிநல்லதொரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். நேரமில்லாத காரணத்தால் பேரவையின் அனுமதியோடு அது ஒத்தி வைக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-50)

11. தனியார் அலுவல்கள்.

தனித்தீர்மானம்.

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்—(தொடர்ச்சி.)

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தின் மீது ஏற்கனவே நாம் விவரமாக இந்த அவையிலே விவாதித்து வருகிறோம். அந்த அடிப்படையில் இன்று நம்முடைய முன்னால் இருக்கக்கூடிய அனுபவங்கள் இந்த அதிகாரங்கள் அதிகமாக வேண்டுமென்பதை வற்புறுத்துகின்றன. நான் 1981 ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் இந்த சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தேன். என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்கள், ஐந்தாண்டுகளுக்கு இந்த சட்டமன்றத்திலே பணியாற்ற வேண்டுமென்று ஓட்டளித்தார்கள். அப்படி ஓட்டளித்ததன் அடிப்படையில், நாம் உருவாக்கக்கூடிய அரசு 1985 மே வரையிலும்

இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று தமிழக மக்கள், தங்களுடைய ஆதிபத்திய உரிமையை நிலைநாட்டியிருக்கிறார்கள். ஆனால், கடந்த சட்டமன்றம் முடிந்து, நான் என்னுடைய தொகுதிக்குச் செல்லுகின்ற காலத்தில், தெருவிலே எல்லாம் பேசுகிறார்கள். ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி, செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி இன்னென்ன தேதிகளில், இந்த அரசாட்சி கவிக்கப் படும், கவிழ்ந்துவிடும் என்ற பேச்சு இந்த நாட்டிலே அடிபடுவதைப் பார்த்தால், இன்று நம்முடைய மக்கள் தேர்தலில் ஓட்டளித்து, ஒரு மாநிலத்தின் அரசாட்சியை உருவாக்கக்கூடிய சக்திபடைத்த அம்மக்களின் ஓட்டுரிமை கேலி செய்யப்படுகிறது. ஏலம் போடப்படுகிறது. சில ஜோசியர்கள் இருக்கிறார்கள், அரசியல் ஜோசியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு மாநிலத்திலே 5 கோடி மக்களால் ஓட்டளிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப் பட்ட அரசாட்சியை கவிழ்ப்பதற்கு ஜோசியம் சொல்லக்கூடிய மகத்தான அரசியல் ஜோசியர்கள் இங்கே ஏற்பட்டிருக்கிறார்கள். மக்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லக்கூடிய அரசியல் ஜோசியர்களை இந்த நாட்டிலே வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது நம்முடைய மக்களுக்கு ஏமாற்றமில்லை; அரசாட்சிக்கு ஏமாற்றமில்லை. நம்முடைய மக்கள் அதிகாரத்திற்கு ஏமாற்றம் ஏற்படுகின்ற அவலநிலை இருக்கிறது; அதை இந்த நாடு கண்டு கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவேதான், இந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற இந்த அடிப்படை உரிமையின்மீது ஏராளமான கருத்துக்களை நான் இணைத்து வைத்திருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். சில விவரங்களை இன்றைக்கு சொல்ல இருக்கிறேன். அடுத்த கூட்டத்தில் தொடர்ச்சியாக பேச வேண்டியவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கூட்டத்திலே நீங்கள் இதுகுறித்து தொடர்ந்து பேசுங்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) கைதான உறுப்பினர்களை விடுதலை செய்வது குறித்து—தொடர்ச்சி.

திரு. எல். இளையபெருமாள்: சபாநாயகர் அவர்களே, காலையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் நாம் எல்லோரும் இலங்கைத் தமிழர் நிலை குறித்து ஒன்றுபட்ட கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் கொண்டுள்ள நல்லெண்ணத்தின் காரணமாக, இந்தஅவையினுடைய உறுப்பினர்கள் புருஷோத்தமன் அவர்களும், சோமு அவர்களும் கைதானது பற்றிச் சொன்னபோது, முன்னவர் அவர்கள் அந்தச் சமயத்தில் இங்கில்லை. அது சம்பந்தமான அறிவிப்பு ஏதாவது சொல்ல தாங்கள் அனுமதி தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்,